# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 76/மா/2023**

**நாள் : 22.06.2023**

திரு. S.R. குருமூர்த்தி,
தஞ்சாவூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி, தஞ்சாவூர் – எதிர்மனுதாரர்

தஞ்சாவூர், மருத்துவ கல்லூரி சாலை, நடராஜபுரம் தெற்கு, 7–வது தெரு, கதவு எண்.222 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.R. குருமூர்த்தி என்பவரின் 20.03.2023 நாளிட்ட மனு 23.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 76/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர், மருத்துவ கல்லூரி சாலை, நடராஜபுரம் தெற்கு, 7–வது தெரு, கதவு எண்.222 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.R.குருமூர்த்தி என்பவர் தனது 20.03.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" நான் தஞ்சாவூர் மாநகராட்சியில் கடந்த 25 வருடங்களாக ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வருகிறேன். எனது பணியில் கடந்த 25 வருடங்களாக எந்தவித புகார்களும் இல்லை. நான் தஞ்சாவூர் மாநகராட்சியில் கடந்த 03.04.2018 அன்று Amma Eco park திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வீட்டு வசதி வாரியம் குறிஞ்சி பூங்கா மேம்பாட்டு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி இருந்தேன். எனது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு கடந்த 13.04.2018 அன்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு முதற்கட்ட பணிகள் ரூபாய் 13,40,407/–க்கு முடிக்கப்பட்டு பிடித்தம் செய்த தொகைகள் போக ரூபாய் 11,89,828/– எனது வங்கிக்கணக்கில் 23.06.2019 தஞ்சாவூர் மாநகராட்சியால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 33,60,000/–க்கு 09.08.2021ல் பணிகள் முடிக்கப்பட்டு அளவீட்டுப்புத்தகம் எழுதி பட்டியல் தொகைக்காக

தஞ்சாவூர் மாநகராட்சி கணக்கு பிரிவுக்கு அனுப்பப்பட்டு கடந்த இரண்டு வருடங்களாக மேற்படி பணிக்கு தஞ்சாவூர் மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டிய தொகை இதுநாள் வரை வழங்கப்படவில்லை. இது தொடர்பாக தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரை பலமுறை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்தும் இதுவரை எனக்கு சேர வேண்டிய நிலுவைத்தொகை வழங்கப்படவில்லை. நான் மேற்படி பணிக்காக வங்கியில் கடன் பெற்று சிறப்பு நிதியின் கீழ் பணி செய்து மேற்படி பணிக்காக பட்டியல் தொகை இதுவரை வழங்கப்படாத காரணத்தினால் நான் வட்டி கட்டிக்கொண்டு மிகவும் சிரமப்படுகிறேன். தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு பணி கொடுப்பதுடன் அவர்களுக்கே பட்டியல் தொகையும் வழங்கிக்கொண்டிருப்பதால் என்னை கவனிக்கவில்லை. எங்களைப்போன்ற ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகை கொடுப்பதை நிறுத்தி விட்டால் நாங்கள் தொடர்ந்து பணி செய்ய இயலாது என்பதாலும், எங்களையெல்லாம் ஒழித்து விட்டால் தனக்கு வேண்டப்பட்டவருக்கு பணி கொடுத்து அதில் ஆதாயம் ஆணையர் பார்ப்பதாக நான் கருதுகிறேன். எனவே முறைமன்ற நடுவர் அவர்கள் எனது மனுவை விசாரித்து எனக்கு சேர வேண்டிய நிலுவைத்தொகை ரூபாய் 33 லட்சத்து 60 ஆயிரத்தை பெற்றுத் தருவதுடன் வேண்டுமென்றே காலதாமதம் செய்த அலுவலர்கள் மீது உரியநடவடிக்கை எடுக்க தாழ்மையுடன் இந்த மனுவை சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 06.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.**

தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது **29.04.2023** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" 1.The respondent does not admit any of the allegations made in the complaint and put the complainant to strict proof thereon.

2. The complaint is not maintainable either in law or on facts and as such it is liable to be dismissed in limine.

3. The respondent submits that the complainant had not specified any date of agreement for the alleged contractual work.

4. The respondent submits that the complainant entered into a contract in 20.12.2018 as per Municipal Form 82, for the purpose of Amma Eco Park development at New Housing Unit, Kurinji Park inThanjavur City Municipal Corporation. In the contract of agreement the form for works was specified and mentioned and the complainant though agreed, but not complied the terms of agreement in a proper manner and acted in violation and contrary to the above agreement.

5. The respondent further submits that the contractual work was not performed by the complainant within the stipulated time of 180 days and the complainant delayed and dragged on the work for more than 2 1/2 years. Thus, the complainant violated the agreement and for which the respondent issued a notice dated 23.02.2021 in Na.Ka.1193/2021/MCE1 to the complainant. On receipt of the said

notice, the complainant had not issued any reply denying the notice or giving any explanation or details for the delay in fulfilling the contractual work. Thus, it is clear that the complainant violated the terms of the contract and caused loss to the Thanjavur City Municipal Corporation. Also, it is humbly submitted that only on receipt of appropriate reply for the aforesaid notice dated 23.02.2021 from the complaint, the respondent will be able to act/respondent to the complaint accordingly.

6. It is submitted that the complainant had not used a qualified materials for constructions and acted illegally to swindle money. Infact most of the articles in wooden doors, windows, miniature fixing are not of quality and even now it all got damaged.

7. In the above notice dated. 23.02.2021, it was also informed to cancel the contract, as the complainant not submitted any details of work report.

8. So, the claim made by the complainant is vexatious and the respondent is not liable to pay Rs. 33,60,000/- as he acted contrary to the agreement.

9. The allegations made against the respondent personally is vague and false.

The respondent reserves to file additional written statement if required. So, the complaint is liable to be dismissed." என தெரிவித்துள்ளார்.

**3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 11.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4) மனுதாரர் 06.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

" தஞ்சாவூர் மாநகராட்சியில் கடந்த 03.04.2018 அன்று Amma Eco Park திட்டத்தின் கீழ் குறிஞ்சிப்பூங்கா மேம்பாட்டுப்பணிக்கு என்னால் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு அதனை ஏற்று பணி உத்தரவுகள் வழங்கப்பட்டது. பணி உத்தரவு வழங்கும்பொழுது பணிமுடிக்கப்பட வேண்டிய காலம் 6 மாதகாலம் என நிபந்தனையுடன் பணி உத்தரவு வழங்கப்பட்டது. கொரோனா தொற்று காரணமாக குறிப்பிட்ட கால அளவான 6 மாத காலத்தில் பணிகளை முடிக்காமல் 09.08.2021ல் பணி முடிக்கப்பட்டது. பணிகள் முடிக்கப்பட்டபொழுது எவ்வித குறைபாடுமின்றி பணிகள் முடிக்கப்பட்டு, மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட பூங்கா மேம்பாட்டுப்பணி முடித்த வகையில் எனக்கு தஞ்சாவூர் மாநகராட்சி ரூ.33,66,000/– அளிக்கப்பட வேண்டியுள்ளது. இதுதொடர்பாக மாநகராட்சி ஆணையர் மற்றும் மேயர் போன்ற உயர் அலுவலர்களிடம் முறையிட்டும் எவ்வித பயனும் இல்லை. மேலும் மேற்கண்ட

நிலுவைத்தொகை வழங்காதது குறித்தும் காலதாமதம் என்னால் ஏற்படுத்தப்பட்டது என தெரிவித்தும் எவ்வித அறிவிப்பும் எனக்கு சார்பு செய்யப்படவில்லை.

எனவே பணி ஆணையில் குறிப்பிட்டவாறு என்னால் செய்து முடிக்கப்பட்ட மேற்கண்ட மேம்பாட்டுப்பணியை மேற்கொண்ட வகையில் எனக்கு மாநகராட்சியால் அளிக்கப்பட வேண்டிய ரூ.33.60 இலட்சம் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் 06.06.2023 நாளிட்ட கூடுதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது 06.06.2023 நாளிட்ட கூடுதல் வாக்குமூலத்தில் " நான் தஞ்சாவூர் மாநகராட்சியில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஒப்பந்ததாரராக உள்ளேன். இன்றைய தேதி வரை எனது பணியில் எவ்வித புகாரும் இல்லை. முறைமன்ற நடுவத்தில் பட்டியல் தொகை வழங்காதது தொடர்பான எனது புகார் தொடர்பான பணி என்னால் உதவிப்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களின் அறிவுறுத்தலின்படி முடிக்கப்பட்டு பணிகளில் முழு திருப்தி அடைந்த பின்பே அளவீட்டுப்புத்தகம் எழுதி இறுதி பட்டியல் தயார் செய்து கணக்குப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுநாள்வரை சுமார் இரண்டு வருடங்கள் மேற்படிப் பணிக்கு பட்டியல்தொகை வழங்காத மாநகராட்சி ஆணையர் இன்றைய தேதி வரை எனது பணி குறித்து எந்தவிதமான புகார் அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை. பணியின் Performance Period முடிந்தும் ஒரு வருட காலம் ஆகிவிட்டது. எனது பணி முடிந்து கட்டடத்தை ஒப்படைத்த நாள் முதல் இன்று வரை மேற்படி கட்டிடத்திற்கு ஒரு காவலாளி கூட நியமித்து பராமரிக்கப்படாத மாநகராட்சி நிர்வாகம் தன்னுடைய தவறுகளை மறைப்பதற்காகவும், எனக்கு பட்டியல் தொகை கொடுப்பதை தவிர்ப்பதற்காகவும் முயற்சிகள் செய்வதாக அறிகிறேன். எனவே முறைமன்ற நடுவர் அவர்கள் நன்கு ஆய்வு செய்து மாநகராட்சியின் அலட்சியத்தால் என்னால் பணி முடிக்கப்பட்ட மேற்படி கட்டிடத்தில் ஏதேனும் இழப்புகள் ஏற்பட்டிருந்தால் அதை சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்து அதை சரி செய்வதற்கு உரிய உத்தரவு பிறப்பிப்பதுடன் இன்று வரை மேற்படி பணி தொடர்பாக எந்த புகார் அறிவிப்பும் எனக்கு வழங்கப்படவில்லை என்பதையும், எனக்கு சேர வேண்டிய பட்டியல்தொகை முழுவதையும் பெற்றுத் தரும்படி தாழ்மையுடன் கோருவதுடன் வேண்டுமென்றே காலம் தாழ்த்திய அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க தாழ்மையுடன் கோருகிறேன்" என தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாநகராட்சியின் உதவிபொறியாளர் 06.06.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" தஞ்சாவூர் மாநகராட்சியில் Amma Eco Park திட்டத்தின் கீழ் குறிஞ்சிப்பூங்கா மேம்பாட்டுப்பணியை மேற்கொள்ள 03.04.2018 அன்று மனுதாரருக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.50,00,000/– ஆகும். ஒப்பந்த நிபந்தனைகளின்படி மேற்கண்ட பணிகள் குறித்த காலத்தில் அதாவது 90 நாட்களுக்குள் முடிக்காமல் இரண்டு வருட கால தாமதத்துடன் முடிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பணிகள் தரமான பொருட்களை கொண்டு செய்து முடிக்கப்படவில்லை. இது தொடர்பான Notice 23.02.2021 அன்று ஒப்புகை அட்டையுடன் ஒப்பந்ததாரரான மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரிடமிருந்து எவ்வித பதிலும்

மாநகராட்சியால் பெறப்படவில்லை. மேலும் மேற்கண்ட பணிகளை ஒப்பந்ததாரரால் முடிக்கப்பட்டு அப்பூங்காவை மாநகராட்சியிடம் ஒப்பந்ததாரர் ஒப்படைப்பு செய்யவில்லை.

மேற்கண்ட பணிகள் தொடர்பாக மாநகராட்சியின் அளவீட்டுப்புத்தகத்தில் (M.Book) பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அதன் நகலினை எடுத்து வராததால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. எனவே, இம்முறைமன்றம் கால அவகாசம் அளித்து, வேறொரு நாளில் விசாரணையில் ஆஜராகக்கோரி உத்தரவிடும் நாளில், மேற்கண்ட அளவீட்டுப்புத்தகம் (அசலாக), மனுதாரருக்கு 23.02.2021 நாளிட்ட அறிவிப்பு மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, அதனை மனுதாரர் பெற்றமைக்கான ஒப்புகை அட்டையின் நகல், அனுப்புகை பதிவேடு (Despatch register) போன்ற பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை இம்முறைமன்றத்தில் நானே நேரில் சமர்ப்பிக்கிறேன் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.06.2023 நாளிட்ட அழைப்பாணை மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி உதவிப்பொறியாளரை அசல் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுடன் 13.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.

13.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் தஞ்சாவூர் மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தன்னுடைய வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" தஞ்சாவூர் மாநகராட்சியில் Amma Eco Park திட்டத்தின் கீழ் குறிஞ்சி பூங்கா மேம்பாட்டுப்பணியை முடித்தது தொடர்பாக கடந்த 06.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது அளவீட்டுப்புத்தகம், அனுப்புகை பதிவேடு, ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை இம்முறைமன்றம் அளிக்கும் வேறொரு நாளில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்ததன் பேரில், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக பதிவு செய்யப்பட்ட M Book அசலாக அனுப்புகை பதிவேடு ஆகிய ஆவணங்களை இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். மேலும் மேற்கண்ட அளவீட்டுப்புத்தகத்தில் (M.Book) மனுதாரர் தஞ்சாவூர் மாநகராட்சியில் மேற்கண்ட பணியை முடித்தது தொடர்பாக எவ்வித குறைபாடும் இருப்பதாக பதிவு செய்யப்படவில்லை எனவும், மேற்கண்ட மனுதாரருக்கு 23.02.2021 அன்று அனுப்பிய தபால் Speed Postல் 24.02.2021 அனுப்பப்பட்டது குறித்த பதிவேட்டை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மனுதாரர் மேற்கண்ட குறிஞ்சி பூங்கா மேம்பாட்டுப்பணியை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி குறித்த காலத்தில் அதாவது 2018 அக்டோபரில் முடிக்கவில்லை எனவும் இது தொடர்பாக கால நீட்டிப்பு கோரி மாநகராட்சிக்கு கடிதம் ஏதும் மனுதாரரால் சமர்ப்பிக்கவில்லை எனவும் மேலும் ஒப்பந்ததாரரான மனுதாரரால் அவர் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது சமர்ப்பித்திருந்த மாதிரியின்படி (Model) மேற்கண்ட பூங்காப்பணியை முடிக்கவில்லை. எனவே, மனுதாரரால் மேற்கொண்ட பூங்காப்பணிகளுக்கான தொகையை முழுவதுமாக அளிக்கப்படவில்லை. எனினும், மேற்கண்ட பூங்காப்பணிகளை மேற்கொண்டவிதத்தில், பணிகள் முழுமை பெறாத காரணத்தால் ஒரு குறிப்பிட்ட தொகையினை பிடித்தம் செய்து மீதித்தொகையினை மனுதாரருக்கு மாநகராட்சியால் அளிக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு, வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சியின் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்பட்ட புகார் தொடர்பான பட்டியல்தொகை வழங்காதது தொடர்பாக மனுதாரரின் பணி உதவிப்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர்களின் அறிவுத்தலின்படி முடிக்கப்பட்டு பணிகளில் முழு திருப்தி அடைந்த பின்பே அளவீட்டுப்புத்தகம் எழுதி இறுதி பட்டியல் தயார் செய்து கணக்குப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் இரண்டு ஆண்டுகள் கடந்தும் அந்த நிலுவைத்தொகையான ரூ.33.60 இலட்சம் வழங்கப்படவில்லை என்றும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட பணியை முடித்தது தொடர்பாக எவ்வித குறைபாடும் இருப்பதாக அளவீட்டு புத்தகத்தில் (M.Book) பதிவு செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் திரு.S.R.குருமூர்த்திக்கு 23.02.2021 அன்று அனுப்பிய தபால் Speed Post–ல் 24.02.2021ல் அனுப்பப்பட்டது தொடர்பான விவரம் அனுப்புகை பதிவேட்டினை ஆய்வு செய்யும்பொழுது அறியமுடிகிறது.

மனுதாரர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி குறித்த காலத்தில் அதாவது 2018ல் அக்டோபரில் முடிக்காமல் இரண்டு வருட காலதாமதத்துடன் முடித்துள்ளார். இது தொடர்பான அறிவிப்பு மாநகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளதை அனுப்புகை பதிவேட்டிலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரர் அவர் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது சமர்ப்பித்த மாதிரியின்படி (Model) மேற்கண்ட பூங்கா பணியை முடிக்கவில்லை. எனினும் பூங்கா பணிகளை மேற்கொண்ட விதத்தில் முழுமையாக முடிக்கபெறாத காரணத்தினால் ஒரு குறிப்பிட்ட தொகையினை பிடித்தம் செய்து மீதித்தொகையினை மனுதாரருக்கு மாநகராட்சியால் அளிக்கப்படும் என தஞ்சாவூர் மாநகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் கொரோனா பெருந்தொற்று காரணமாக பணிமுடித்திட கால அவகாசம் கோரி மாநகராட்சியிடம் முறைப்படி அனுமதி வாங்கியிருக்க வேண்டும். வாங்கப்படவில்லை. ஆனாலும் பணிகள் தொடர்பான எந்த குறைபாடுகளும் மாநகராட்சியால் தெரிவிக்கவிக்கப்படவில்லை. ஆனால், காலதாமதமாக பணி முடிக்கப்பட்டுள்ளது என்பதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. இந்நேர்வில் மனுதாரரால் மாநகராட்சிக்கு மேற்கண்ட ஒப்பந்தபணியினால் ஏற்பட்டுள்ள இழப்புகளை கணக்கீடு செய்து அந்த தொகையினை பிடித்தம் செய்து விட்டு மீதித்தொகையினை

காலம்தாழ்த்திடாமல் மனுதாரர் திரு.S.R.குருமூர்த்தி அவர்களுக்கு வழங்கிட தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தினை 45 நாட்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.R.குருமூர்த்தி,
த/பெ. S.ரத்தினம்,
எண்.222, 7வது தெரு,
நடராஜபுரம் தெற்கு,
மருத்துவக்கல்லூரி சாலை,
தஞ்சாவூர் – 613 007.

2. ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/6/23

உதவி பதிவாளர்

22.6.23